ISSN (Online) : 2349 -1639
ISSN (Print) : 2320 - 3412


# தமிழாய்வுச் சங்கமம்

# TAMILAIVU SANGAMAM

VOL - V | ஜனவரி – மார்ச் 2018 | ISSUE - 11

வெளியீடு நாள் : 25 ஜனவரி 2018
ஆண்டு சந்தா ₹ 1000

UGC Approved Journal 64089



Cosmos
CIF : 3.458

International Research Journal Impact Factor
IRJIF
IRJIF : 3.669

Indexed & Abstracted in

CiteFactor | Cosmos | DAIJ | DOAJ | DRJI | Scientific Indexing Services | International Innovative Journal Impact Factor (IIJIF)

Journal Index.net | ESJI Eurasian Scientific Journal Index www.ESJIndex.org | General Impact Factor | iiFactor | Universal Impact Factor | OAJI .net

IARA Indian Academic Research Association

INDIAN ACADEMIC RESEARCHERS ASSOCIATION
www.selptrust.org
E.mail : iara@selptrust.org

# தமிழாய்வுச் சங்கமம்

பன்னாட்டுத் தமிழ் இலக்கிய ஆய்விதழ் – ISSN : 2320-3412(P), 2349-1639(O)

# TAMILAIVU SANGAMAM

(An International Research Journal on Tamil Literature)

**Impact Factor : 3.458(CIF), 3.669(IRJIF) UGC Approved Journal (64089)**



## முதன்மை ஆசிரியர்கள்

முனைவர் **தமிழ்மாறன்**
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்

முனைவர் **பா. பொன்னி**
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம்
மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி

## ஆசிரியர் ஆலோசனைக்குழு

முனைவர் **சீதாலட்சுமி**
நன்-யாங் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம்
சிங்கப்பூர்

முனைவர் **மு. பாலகுமார்**
இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம்
மைசூர்

முனைவர் **கோ. பாலசுப்பிரமணியன்**
திராவிட பல்கலைக்கழகம்
குப்பம், ஆந்திரப்பிரதேசம்

முனைவர் **ப. ஜெயகிருஷ்ணன்**
கேரளா பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம், கேரளா

முனைவர் **செந்தில்குமார்**
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
வேலூர்

முனைவர் **சி.சுந்தரேசன்**
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முனைவர் **பா.சங்கரேஷ்வரி**
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

முனைவர் **அ.கோவிந்தராஜன்**
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி

முனைவர் **பூ.மு.அன்புசிவா**
சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி
கோயம்புத்தூர்

முனைவர் **சி.அருள் மைக்கல் செல்வி**
பாத்திமா கல்லூரி
மதுரை



## தொடர்பு முகவரி

**நிர்வாக ஆசிரியர்**

5A, சத்யசாய் தெரு, கே.கே.நகர், திருச்சிராப்பள்ளி – 620 021. தமிழ்நாடு

**tamilaivusangamam@gmail.com** **Mobile : 94423 54207**

**www.selptrust.org**

# தமிழாய்வுச் சங்கமம்

பன்னாட்டுத் தமிழ் இலக்கிய ஆய்விதழ் – ISSN : 2320-3412(P), 2349-1639(O)

Impact Factor : 3.458(CIF), 3.669(IRJIF) UGC Approved Journal (64089)

பகுதி – V ஜனவரி – மார்ச் 2018 பதிப்பு – 11

## பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழிலக்கியங்களில் குறவர்கள், நரிக்குறவர்களோடு ஓர் ஒப்பீட்டு பார்வை<br>செ.விஜய் | 1-5 |
| 2. | புதுக்கவிதையில் தொன்மம்<br>ச.தனலெட்சுமி | 6-10 |
| 3. | தேவதாசி மரபின் தோற்றமும் வளர்ச்சியும்<br>ப.மீனாட்சி | 11-16 |
| 4. | ஐங்குறுநூற்றில் பூக்கள்<br>ஆ.எழிலரசி | 17-21 |
| 5. | பரிபாடலில் செவ்வேள் வழிபாடு<br>ஜோ.சூசை ஜெஸிந்தா மெர்சி | 22-25 |
| 6. | முடியரசன் கவிதைகளில் பெண்களின் நிலை<br>ரா.முல்லை | 26-29 |
| 7. | பெண்ணிய நோக்கில் கரிப்பு மணிகள்<br>ஆ.முத்துத் தமிழரசி | 30-35 |
| 8. | நீா் என்னும் வழிபாட்டு வெளி<br>ம. பிரசன்னா | 36-38 |
| 9. | இனியவை நாற்பதில் இயற்கைசாா் சமுதாயம்<br>பா.ரம்ஜான் | 39-43 |
| 10. | இஸ்லாமியத் தமிழ்ச்சிறுகதைகளில் காணும் சமூகம்<br>மு.சாஹிரா பானு | 44-49 |
| 11. | போர்க்களத்தில் வீரர்களின் செயல்பாடுகள்<br>வி.அன்னபாக்கியம் | 50-54 |
| 12. | சங்ககாலப் பெண்களின் வாழ்வியல் நெறிமுறைகள்<br>பெ.ஆறுமுகம் | 55-58 |

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 3.458(CIF), 3.669(IRJIF)
பகுதி - V/ பதிப்பு - 11
ஜனவரி - மார்ச் 2018
*UGC Approved Journal (64089), © Author*

# பரிபாடலில் செவ்வேள் வழிபாடு

**முனைவர் ஜோ.சூசை ஜெஸிந்தா மெர்சி**
**உதவிப் பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, பாத்திமா கல்லூரி,**
**மதுரை - 18**

## முன்னுரை

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பண்டைத் தமிழ் மக்கள் இயற்கையின் சீற்றத்திற்கு அஞ்சினர். இயற்கையின் மீது கொண்ட அச்சமே வழிபாட்டின் தொடக்கமாக அமைந்தது. பயமும் அச்சமும் தெய்வ நம்பிக்கையை உண்டாக்கின. தொல்காப்பிய காலத்திலேயே தமிழ்நாட்டில் பல தெய்வ வழிபாடுகள் நிலைத்திருந்தன. 'தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவி' என்பது தொல் காப்பியச் சூத்திரம்.தெய்வத்தை குறிக்கும் பெயர்ச்சொற்கள் என்பது இதன் பொருள். இதன் மூலம் தெய்வத்தை குறிக்கும் - தெய்வங்களின் பெயர்களைக் குறிக்கும் சொற்கள் பல தொல்காப்பிய காலத்திலேயே வழங்கின என்பதை அறியமுடிகிறது. தொல்காப்பியர் கூறும் நானில மக்களும் நான்கு தனித்தனி தெய்வங்களை வணங்கி வந்தனர். அவற்றுள் குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாக செவ்வேள் போற்றப்பட்டிருக்கின்றான். 'சேயோன் மேய மைவரை உலகமும்' என்ற தொல்காப்பியப் பாடலடி இதனை விளக்கி நிற்கின்றது. செவ்வேள் வழிபாடு தொன்மைமிக்கது. தமிழர்களின் பண்பாடு, மொழி, தத்துவம், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றோடு செவ்வேள் வழிபாடு இரண்டறக் கலந்திருந்த தன்மையைச் சங்க இலக்கியங்கள் மிகச்சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் இசைநலம் வாய்ந்து தனித்துவமாக விளங்கும் பரிபாடலில் செவ்வேள் வழிபாடு இடம்பெற்றுள்ள பாங்கினை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

### செவ்வேள்

குறிஞ்சிக் கடவுளான முருகன் செந்நிறம் (செங்கேழ்) பொருந்தியவன். செம்மேனி சிவபிரானின் சேய். எக்காலமும் போர் செய்பவன் என்ற பொருளில் செவ்வேள் என்றழைக்கப்பட்டான். 'வேள்' என்ற சொல்லிற்கு விருப்பத்தைச் செய்கின்றவன் அல்லது கொடுக்கின்றவன் என்பது பொருள்.

**'வெண்சுடர் வேல்வேள்' (பரி 18.26)**
**'காஅய் கடவுள் சேஎய்! செவ்வேள்' (பரி 5.13)**

என்று பரிபாடலில் செவ்வேள் என்ற சொல் இடம் பெறுவதைக் காணமுடிகின்றது.

சைவக் கடவுளான சிவன் பார்வதி தம்பதிகளுக்கு மகனான இவர் நிலங்கடந்த பெருங்கடவுளாக எல்லா நிலத்தினராலும் போற்றப்படுகின்றார். . செவ்வேளை அதிகம் வழிபடுபவர்கள் தமிழர்களே. அதனால் இவர் 'தமிழ்க்கடவுள்' என்றும் அழைக்கப்படுகின்றார்.

### செவ்வேளின் தோற்றம்

செவ்வேள் ஆறு தலைகளையும் இளங்கதிர் மண்டலம் போன்ற முகத்தினையும் மத்தளம் போன்ற பன்னிரண்டு தோள்களையும் பன்னிரண்டு கைகளையும் சூரியனது ஒளியை ஒத்த நிறத்தினையும் உடையவன் என்பதை,

**'மூவிரு கயந்தலை, முந்நான்கு முழவுத்தோள்,**
**ஞாயிற்றேர் நிறத்தகை' (பரி,5.1-12)**